நடுத்தர வகுப்பு ஒரு நிலைத்த சக்தி

பணக்காரரை இறக்கிப் பாட்டாளியை உயர்த்த! திட்டம் வேண்டும்

இரயில்வே நாட்டின் இரும்பு நரம்புகளாகும்

விலை அரை அணா | 4 பக்கம் | Regd. No. M. 5458

Phone No. 4502

மாலை மணி

ஆசிரியர்: C. N. அண்ணாதுரை M.A. MALAI MANI

(திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ்)

மலர் 1 | சென்னை (11—9—49) | வெளியூர் (12—9—49) | இதழ் 33

அறிவுப் படை திரள ஆக்கம் புரிக

அண்ணாதுரை கருத்துரை

[நேற்றைய தொடர்ச்சி]

கம்யூனிஸ்டுகளுக்காக இவ்வளவு பரிந்து பேசுகிறாயே, நீயும் அவர்களிலே ஒருவன் தானா? என்று கேட்பீர்கள். கம்யூனிஸ்டுகளுக்கும் எனக்கும் பெருத்த பேதம் — அடிப்படையிலேயே அதிக பேதம் உண்டு.

கம்யூனிஸ்டுகள், ஏழை-பணக்காரன், பாட்டாளி-பூர்ஷ்வா, என்ற இரண்டே இரண்டு பிரிவுதான் உண்டு என்ற போக்கினர்-கொள்கை கொண்டவர்கள். கார்ல் மார்க்ஸின் முதலாளி-தொழிலாளி தத்துவத்தை விடாப்பிடியாகக் கொண்டவர்கள்.

நடுத்தர வகுப்பினர்

மார்க்ஸ் கூறியதெல்லாம், இந்த இரண்டு பாட்டாளி-பூர்ஷ்வா (பணக்காரன்) என்ற இரு பாகுபாடுதான். நாம் கூறுகிறோம், ஏழை இருக்கிறான் பணக்காரன் இருக்கிறான் இந்த இருவருக்கு மிடையே நடுத்தர வகுப்பினர் (Middle class) என்ற ஒருபகுதியினரும் இருக்கின்றனர் என்று. இந்த நடுத்தர வகுப்பினர், ஏழைகளுமல்ல, பணக்காரர்களுமல்ல, இரண்டுமல்லாதவர்கள். ஓரளவு ஏழைகளைவிட வாழ்க்கை வசதிபெற்றவர்கள், ஆனாலும் பணக்காரர்களல்ல, முதலாளிகளுமல்ல இவர்கள், என்றாவது ஒரு நாள், பணக்காரர்கள் ஆகி விடுவோம் என்ற ஆசையுடன் இருப்பவர்கள். அந்த நேரத்திலே, எங்கே உள்ளதும் போய் ஏழையாகி விடுகிறோமோ என்ற அச்சத்தோடும் கூடியிருப்பவர்கள்.

இப்படி நடுத்தர வகுப்பினர், ஆசைக்கும் அச்சத்திற்கும் இடையே வாழ்க்கையில் ஊசலாடிக் கொண்டிருக்கின்றனர்.

இவர்கள், வாழ்க்கை நிலையைப் பற்றிய ஆசையும், தாழ்வைப் பற்றிய அச்சத்தையும் உடையவர்கள். ஆருடக்காரனைப்பார்த்தால், என்னஐயா பக்கத்து வீட்டுக்காரனைப்போல எப்போது நானும் மாடி வீட்டுக்காரனாவேன் என்று, ஆசையோடு கேட்பார்கள். அதற்கு ஆருடக்காரன், "அப்படி ஒன்றும் கிரகபலன் காணோமே என்று சொல்லிவிட்டால், போதும், அச்சம் பிறந்துவிடும். "சரி, சரி, இருக்கிறதாவது, தங்குமா, பாருங்கோ" என்றுபதைபதைப்பார்கள். இப்படி இவா்களது வாழ்க்கை இருக்கும்.

இங்குப் பெரும் பகுதியினர்

இந்தகையினர் அதாவது நடுத்தர வகுப்பினர், இங்கு நூற்றுக்கு அறுபது பேர்-மக்கள் தொகையில் பெரும் பகுதி! வாழ்க்கைக் கஷ்டத்தின் கோடியிலும் இல்லை; வளமான பகுதியின் எல்லையிலுமில்லை, இரண்டுங்கெட்டான் நிலை இவர்களது வாழ்வு. ஒரு பக்கம் ஆசை; வாழ்விலே வளம் பெறலாம், என்று. உள்ளவாழ்வே, குறைந்து விடுமோ என்ற கிலி, அச்சம் வேறோர் பக்கம். இவர்களை வேலை நிறுத்தக் காலத்திலே. மிரட்டி, மயக்கி முதலாளிகள் பக்கம் சேர்ப்பது முடியாத காரியமல்ல!

ஆனால், பெரும் பகுதி— நூற்றுக்கு அறுபதுபேர், இவர்களைத் தொழிலாளர்களோ அல்லது அரசாங்கமோ அலட்சியம் செய்துவிடமுடியாது. இவர்களது வாழ்க்கைத் தரத்திற்கேற்பவும் திட்டங்கள் தீட்டப்படவேண்டும், நடுத்தர வகுப்பினரின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி, அந்த நிலைக்குப் பணக்காரர்களை இறக்கி, ஏழைகளை நடுத்தர வகுப்பினரின் நிலைக்கு உயர்த்தும் திட்டம்தான் பயன்படும் இதனை ஆங்கிலத்தில் Levelling up and levelling down என்பார்கள்.

ஒருநிலைக்குக் கொணரும் திட்டம்

இதனை நன்குபுரிந்துகொண்டு, இதற்கேற்ப, நல்ல நிபுணர்களைக் கொண்டு. திட்டங்கள் தீட்டப்படவேண்டும்.

நடுத்தர வகுப்பினன் ஒருவனுக்கு, 2 ஏக்கர் நிலம், ஓர் சிறு வீடு, எருமை முதலியன இருக்கின்றன என்று கொள்வோம். அவனிடம் சென்று, நீ முதலாளி ஏஜண்டு, நீயும் பணக்காரன்தான், பொது உடைமை ராஜ்யம் வந்தால் இவையெல்லாம் உன்னிடமிருந்து பறிக்கப்பட்டுவிடும் என்றால், என்ன ஏற்படும்!

அவனுக்கிருப்பதோ 2 ஏகர் நிலம், ஒரு சிறு வீடு, எருமை இவைவாழ்க்கையைப்பூரணமாக வளம் பெறச் செய்யமுடியா. வீடு போகும், நிலம் போகும். எருமையும் பறிக்கப்படும் என்றால், வேண்டாம் இந்த வேதனை 'நேசம்' என்றுதானே அவன் நினைப்பான், கூறுவான். எனவே தான், அவர்களை அலட்சியப்படுத்தாது, பிற்போக்குக் கும்பலில் சேர்க்காமல், அவர்களுக்கும் நிலைமையைத் தெளிவு படுத்தி, முதலாளி பக்கம் சேராமல், நிறுத்தவேண்டும் - புரியவைக்கவேண்டும். இதைத்தான் நாங்கள் செய்கிறோம், செய்தும் வருகிறோம்

நிலைத்த நிலை பெற்றுக்கொள்ளும் வகுப்பு

ரஷியாவிலே மாபெரும் புரட்சி நடந்தது. கார்ல்மார்க்ஸ் திட்டம் தீட்டினார். லெனின் பாதை வகுத்தார். ஸ்டாலின் நிறைவேற்றினார். அதேபோன்று வேறு ஐரோப்பிய நாடுகளிலே நடைபெறவில்லை. ஏன்?

கார்ல் மார்க்ஸ் தமது திட்டத்தில், ஏழை—பணக்காரன் இரண்டு பாகுபாடுகள் தான் இருக்கின்றன என்றார். அது மட்டுமல்ல, இந்த நடுத்தரவகுப்பினர் அழிந்துபடுவர், அப்படி, ஒரு பகுதி இருக்கவே இருக்காது என்றும் கூறினார். நடந்தது என்ன? அவர் எதிர்பார்த்ததற்கு நேர்மாறாக, அவர்கள் அழிந்து விடவில்லை என்பது மாத்திரமல்ல, நடுத்தர வகுப்பினர் தங்களை நன்றாக ஸ்திரப்படுத்திக் கொண்டனர் ஐரோப்பிய நாடுகளில். இவர்கள் இவ்விதம் தங்களை நிலைக்கச் செய்து கொண்டதால் தான், ரஷியப் புரட்சி அமைப்பாளர்கள மற்ற நாடுகளில் பெருவாரியாகப் புரட்சிகளை உண்டாக்க முடியவில்லை.

நான் கூறினேன், நடுத்தர வகுப்பினர், ஆசைக்கும் அச்சத்திற்கும் இடையே ஊசலாடிக் கொண்டிருப்பவர்கள் என்று. குமாஸ்தாக்களாகிய (Office Clerks) உங்களையும் நான் இந்தப்பட்டியலிலேயே-நடுத்தர வகுப்பினர் பட்டியலிலேயே தான் சேர்க்கிறேன். நீங்கள் உடல் உழைப்பாளிகளல்ல (Manual labourers) நீங்கள் குமாஸ்தாக்கள் (Office Clerks).

ரொட்டியே கிடைக்காதவர்கள்

உங்களுக்குள்ள குறைபாடு என்ன? வாங்கும் சம்பளம் கொஞ்சம் கூடினால் ஓவல்டின் வாங்கலாமே என்பது, ஒரு நாள் சினிமாவுக்குச் செல்லலாம் என்பது போன்றவை தானே? வேறு என்ன? உண்ண உணவில்லை என்று

[தொடர்ச்சி 4-ம் பக்கம் பார்க்க]

கல்வித் துறையில் :: :: கடும் தடை

கல்வி யில்லா நாட்டில் இக்கொடுமை ஏன்?

சென்னைப் பல்கலைக் கழகம் நடத்தும் பலவகைப்பட்டக் கல்வித் தேர்வுகளில, நாட்டு மக்களுள் படிக்க விரும்புபவர் அனைவரும் கலந்துகொள்ள முடியாதபடி, பல தடைகள் விதிக்கப்பட்டிருக்கின்றன.

சென்னை மாகாணத்தில் 100-க்கு 12 பேர்தான் எழுதப் படிக்கத் தெரிந்தவர். பள்ளிக் கூடங்களும், கல்லூரிகளும், ஒவ்வோராண்டும் படிக்க விரும்புபவர்களுக்குப் போதியனவாக இல்லை என்ற கூக்குரல்ஒவ்வோராண்டுமகிளம்புகின்றது.

இங்கிலையில், இண்டர்மீடியட், பி. ஏ., எம். ஏ., பி. ஓ எல். போன்ற பட்டப் பரீட்சைகளுக்குக் கல்லூரிகளில் சேர்ந்து படிக்காதவர்கள் தனி முறையில் உட்கார முடியாதபடி தடை இருக்கிறது.

இந்தத்தடை ஒழிய வேண்டும். தமிழ் விதவான் படிக்க விரும்புபவர்கள் இத்தனை வயதிற்கு மேற்பட்டுத்தான் பரீட்சைக்கு வரவேண்டுமென்ற விதி ஒன்று இருக்கிறது.

இந்தத் தடை விதிகள் அனைத்தும், கல்வியில்லாத இந்த நாட்டில் ஒழிக்கப்பட்டாகவேண்டும். எவர்வேண்டுமானாலும், எந்த வயதில வேண்டுமானாலும் பல்கலைக் கழகப் பாடத் திட்டங்களுக்குக் கட்டுப்பட்டு எந்தப் பரீட்சைகளுக்கும் போகலாம் என்ற வசதி இருக்க வேண்டும்.

அதே போன்று, எஸ். எஸ் எல். சி. போர்டு நடத்தும் பரீட்சைக்கும், வீட்டிலேயே படித்து விட்டு எவரும் எந்த வயதிலும பரீட்சைக்கு வரலாம் என்ற திட்டமிருக்க வேண்டும்.

இப்படிச் செய்வதனால் படித்துக் கல்வியறிவைப் பெருக்கிக் கொள்ள ஆசைப்படுபவர்கள் தத்தம் ஓய்வு நேரங்களில் படித்துப் பயன் பெறலாம். பள்ளிக்கூடங்களில் சேரமுடியாத மாணவர்கள் தனிப்பட்டமுறையில படித்து முன்னேறலாம். கல்வித்துறையில் வயதுக் கட்டுப்பாடு போன்ற கட்டுப்பாடுகள் எவையும் இருத்தல் கூடாது.

இங்ஙனம் செய்வதால், பள்ளிக்கூடங்களிலும், கல்லூரிகளிலும் நெருக்கடி குறையும். பலர் படித்து முன்னேற வசதி ஏற்படும். சென்னைப் பல்கலைக் கழகத்தாரும், சென்னை அரசாங்கத்தாரும் இதில் கவனம் செலுத்துவார்களா?

நாச்சியப்பரின் தெளிவு!

"ஜனங்கள் தம் மீது குறைகூறாமல் இருக்கவும், ஜனங்கள் மீது குற்றம் கற்பிக்கவுமே பிரிட்டிஷ்காரர்கள் ஸ்தல ஸ்தாபன முறையை அமுல் நடத்தினர்."

—திருச்சியில், கே. ஏ. நாச்சியப்பர் (கவுண்டர்)

* * *

பிள்ளைகள், தம் மீது குறைகூறாமல் இருக்கவும், பிள்ளைகள் மீது குற்றம் கற்பிக்கவுமே, பெற்றோர்கள் பிள்ளைகளைப் பள்ளிக்கு அனுப்புகின்றனர்!

* * *

இத் துணைக்கண்டத்து மக்கள், தம்மீது குறைகூறாமல் இருக்கவும், இங்குள்ள மக்கள்மீது குற்றம் கற்பிக்கவுமே, ஆங்கிலேயர்கள். இந்தியாவிற்கு சுயாட்சி வழங்கினர்!

* * *

வயதுவந்தவர்கள் தம் மீது குறைகூறாமல் இருக்கவும். வயது வந்தவர்கள் மீது குற்றம் சுமத்தவுமே, புது அரசியல் அமைப்பில் வயது வந்தவர்களுக்கு வாக்குரிமை வழங்கி இருக்கிறது காங்கிரஸ் கட்சி!

சரிதானே!

மக்கள் உலகம் :: வளரும் வேகம்

3 விநாடியில் இரண்டு பிறப்புகள்

உலகில் ஒவ்வொரு மூன்று விநாடிகளிலும், இரண்டு குழந்தைகள் பிறந்து, மக்கள் எண்ணிக்கை வளர்ந்து கொண்டே இருப்பதாக, சர் ஜான் ரஸ்ஸல் என்ற விஞ்ஞானி தெரிவிக்கிறார். அவர் பிரிட்டிஷ் விஞ்ஞான முற்போக்குக் கழகத்தில் தலைமையுரை ஆற்றும்போது, இச் செய்தியை வெளியிட்டுள்ளார். அவர்மேலும் குறிப்பிடும்போது, சென்ற ஒரு நூற்றாண்டுக் காலத்தில், விஞ்ஞானமானது, மனித வாழ்வின் அளவை நீடித்திருக்கச் செய்திருப்பதோடு மட்டுமல்லாமல், வாழ்வை நிலைத்ததாகவும் செய்திருக்கிறது. இதன் விளைவாக உலக மக்களின் எண்ணிக்கை முன்பெல்லாம் இருந்ததைக் காட்டிலும், எவ்வளவோ விரைவாகப் பெருகிக் காணப்படுகிறது. இப்பொழுது உலகில் 230 கோடி மக்கள் இருக்கிறார்கள். ஆண்டு ஒன்றுக்கு இரண்டு கோடி மக்கள் பிறக்கிறார்கள் என்ற உண்மைகளை அவர் வெளியிடுகிறார்.

உள்ளபடியே, 'சித்திரபுத்திரனுக்கு' வேலை கஷ்டமாகத்தானிருக்கும். அவருடைய இலாக்காவை 'மகாவிஷ்ணு' பெரிதாக்கிக் கொடுத்தாலல்லது, 'சித்திரபுத்திரன்' காரியாலய சிப்பந்திகளுக்குக் கஷ்டம் ஏற்படும் என்பது திண்ணம்தான்! ஒன்று, இலாக்காவைப் பெரிதாக்கி, 'பிறப்பு' 'இறப்பு' கணக்குகளைப் பதிவு செய்ய வேண்டும் அல்லது 'பிர்மா' காரியாலத்தில் சில ஆண்டுகளுக்குக் கதவடைப்பு முறையையாவது அனுஷ்டிக்கச் செய்ய வேண்டும்! அல்லது 'சிவபெருமான்', தன் நெற்றிக்கண்ணைத் திறந்து 'அக்கினி' குண்டுகளைப் பொழிந்து, மக்களில் பெரும்பாலோரை நாசம் செய்ய வேண்டும்! பூலோகத்தில் பிரச்சினையைத் தீர்ப்பது என்பது எவ்வளவு கடினமோ, அதைவிட அதிகக் கடினமாகத்தானிருக்கும் தேவலோகங்களிலும்! ஆகவே பிரச்சினைகளைச் சுகமான முடிவுகளுக்குக் கொண்டுவர, இந்தியாவின் ஆலோசனையின்பேரில் உலக வல்லரசுகளின் தூதுவர்களை தேவலோகத்திற்கு அனுப்பி வைத்தால், ஓரளவுக்கு நலம் பயப்பதாக முடியலாம்!

சென்னை மாகாணத்திற்கு வரக்கூடாது

ஆலப்புழை தோழர் T.M. பிரசாத் என்பவரால் இயற்றப்பட்டுள்ள 'புரட்சிக் கவிதைகள்' என்ற மலையாளக் கவிதை நூலை, சென்னை மாகாணத்திற்குள் கொண்டுவரவோ, விற்கவோ கூடாது என்று, சென்னை சர்க்கார் தடுத்து விட்டு இருக்கிறது.

சாட்சிகள்

28-9-'49 அன்று, சென்னை, ஆறுவது மாகாண மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டில் நடைபெற இருக்கும் பெரியார் - சம்பத், வழக்கில், தோழர் E. V. K. சம்பத அவர்கள் தமது சார்பாகச் சாட்சியம் கூற, அழைத்திருக்கும், பிரமுகர்களின் பட்டியல் கீழே தரப்படிருக்கிறது.

மற்றும் பலரும், சாட்சிகளாக வரக்கூடுமென்று தெரிகிறது.

ஈரோடு சேர்மன் சென்னியப்ப கவுண்டர், ஈரோடு முன்னாள் சேர்மன் R. K. வெங்கிடசாமி, திருவண்ணாமலை சேர்மன் ப. உ. சண்முகம், திருப்பத்தூர் சேர்மன் C M. சுப்பிரமணிய நாயுடு, திருசிராப்பள்ளி கவுன்சிலர் N. சங்கரன், காஞ்சீபுரம் கவுன்சிலர் C. V. ராஜகோபால், பெத்தாம்பாளையம் பழனிச்சாமி, திருப்பூர் S.R. சுப்பிரமணியம், கோவை D. V. நாராயணசாமி, தாதம்பட்டி ராஜு, திருப்பத்தூர் வக்கீல் E. L. ராகவ முதலியார், சென்னை கார்ப்பரேஷன் கவுன்சிலர் முனுசாமி, சென்னை C.D.T. அரசு, சென்னை S.M. மொய்தீன், ஈரோடு அர்பன் பாங்க் தலைவர் சிக்கைய்ய நாய்க்கர், சேலம், செல்வம் பிலிம்ஸ் A. சங்கரன்,

வாழ வசதியற்ற வீடுகள்

சென்னைநகரில் இன்று வாடகை வீடுகள் உள்ள நிலைமை, ஒரு நாகரிக நகரிற்குச் சற்றும் பொருந்தாததாயிருக்கிறது. இத்தனை பேர் குடியிருக்க இவ்வளவு விஸ்தீரணமுள்ள இடம் இருக்கவேண்டுமென்றும், இன்ன விஸ்தீரணமுள்ள இடத்திற்கு இவ்வளவுதான் வாடகை வசூலிக்க வேண்டும் என்றும், குறைந்த பட்சமாகவுள்ள அறைகள் இவ்வளவு விஸ்தீரணத்திற்குக் கீழ்ப்பட்டிருக்கக் கூடாதென்றும், ஒரு திட்டம் வகுக்கப்பட்டிருத்தல் வேண்டும். இத்தனை குடிகளுக்கு இத்தனைக் குழாய்கள், இத்தனைக் கக்கூஸ்கள், தனிக்குளிக்குமிடங்கள், சிறுநீர்போகுமிடங்கள் தனித்தனி கட்டப்பட்டிருத்தல் வேண்டுமென்றும், ஜன்னல் இல்லாத அறை ஒன்று கூட இருத்தல் கூடாதென்றும் திட்டம் இருக்கவேண்டும்.

இவற்றை மீறுவோர் உடனுக்குடன் கவனித்துத் தண்டிக்கப்பட வேண்டும். இவ்விதிகளுக்கு மாறு[illegible] வீடுகள் இருந்தால், அந்தப் பகுதியைச் சேர்ந்த ஓவர்சியர், சானிட்டரி இன்ஸ்பெக்டர் முதலிய இது சம்பந்தப்பட்ட அதிகாரிகள், விசாரணைக்குக் கொண்டு வரப்பட்டுத் தண்டிக்கப்பட வேண்டும்.

இவ்வாறான நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்படாத வரை, நகரங்களில் வாழும் மக்களின் சுகாதாரம் கவனிக்கப்படுகிறதென்னும் பேச்சு, பொருளற்றதாகின்றது. இதற்கெனசுகாதார அதிகாரிகளும் மந்திரிகளும் இருந்தும் பயனில்லை.

இது விஷயத்தில் சென்னை நகரசபையோ, அரசாங்கமோ எந்த விதமான தயவு தாட்சணியத்துக்கும் கட்டுப்படாமல், கேர்மையான முறையில் நடந்து சென்னை நகர மக்களின் வாழ்க்கை வசதியில் அக்கரை காட்ட முன்வர முடியுமா?

வீண் செலவுகளை நிறுத்தி வீடு கட்டுங்கள்

சென்னை அரசாங்கம் தக்ளி சுற்றுவது, சர்க்கா சுற்றுவது சதர் செய்வது போன்ற வீண், வேலைகளில் பணத்தைச் செலவிடுவதையும், இன்னும் இது போன்ற வெட்டித் திட்டங்களில் பணத்தைப் பாழாக்குவதையும் நிறுத்திவிட்டுச் சென்னை நகரிலும், சென்னை மண்டலத்தின் பிறநகரங்களிலும் வீடற்ற மக்களுக்குப் பல வீடுகள் கட்டித் தரும் வேலையை மேற்கொள்ள வேண்டுகிறோம்.

சென்னை நகரம், சென்னை மண்டலத்தின் தலை நகரமாயிருந்தும், தெரு ஓரங்களில், சாக்கடைகள் மீது பல ஏழைமக்கள் குடியிருப்பை வைத்துக் கொண்டிருப்பதைச் சென்னை நகரசபை பார்த்துச் சகித்துக் கொண்டுதானிருக்கிறது. "சென்னை நகர அபிவிருத்திக் கழகம்" என ஒரு நிலையம் சென்னை நகரில் இருந்தும், வீடற்ற மக்கள் பலர் தெரு ஓரங்களில் சமைத்து உண்டு உடுத்துஉறைந்து வருவதை ஒழித்து அவர்களுக்குத்தக்க இருப்பிடங்கள் தேடித்தந்து, நகரை அழகுபடுத்த முன்வரவில்லை.

இப்படிப்பட்ட நிலைமையினை மாற்றச் சென்னை அரசாங்கமும், நகரசபையும் உடனே முன்வர வேண்டும். ஐரோப்பிய நாடுகளில் 10 வாரங்களவரை சுற்றுப்பிரயாணம் செய்து விட்டு, இவ்வாரம் கல்கத்தா வந்து சேர்ந்த டாக்டர் பி.சி. ராய், ஒரே நாளில் 3சிமெண்ட் காங்கிரீட் வீடுகளை உற்பத்தி செய்யும் இயந்திரத்தைக் கோபன்ஹேகனில் (ஸ்வீடனில்) பார்த்ததாகவும் மிகவும் குறைந்த விலையில் அவ்வியந்திரத்தை இந்தியாவுக்குக் கொண்டுவருதல் இயலும் செயலே என்றும் கூறியுள்ளார்.

இதனைச் சென்னை அரசாங்கம் கருத்தில் கொண்டு, இத்தகைய இயந்திரங்களை வரவழைத்து, ஏராளமான வீடுகளைக் கட்டித் தந்து, மக்கள் சாக்கடை ஓரங்களில் வாழ்ந்து, நகர அழகைக் கெடுப்பதை ஒழிக்க வேண்டுகிறோம்.

சிவாஜி துவக்க விழா

T. K. S. சகோதரர்களின் 'சிவாஜி' நாடகம் சென்னை ஒற்றைவாடை நாடக அரங்கில், 7-9-49-ல், மாலை 6-மணிக்கு; 'தினமணி' ஆசிரியர் தோழர் சிவராமன் முன்னிலையில் துவக்கப்பெற்றது. பல எழுத்தாளர்களும், பத்திரிகை ஆசிரியர்களும் வந்திருந்தனர். நாடக இடைவேளைக்குப்பின், தோழர் பகவதி அவர்கள் விருப்பத்தின்படி, தோழர் சிவராமன் அவர்கள் சில வார்த்தைகள் பேசினார். வெளியுலகில் எழும் இரைச்சல் நாடக அரங்கிற்குள் புக முடியாத நிலையில், மேல் நாடுகளைப் போல, சென்னை நகரிலும் ஒரு அரங்கை அமைக்க வேண்டியது அவசியம் என்றும், நாடகம்முடிந்ததும், நாடகத்தில் பங்குகொண்ட நடிகர்கள் அனைவரும் வேஷங்களைக் கலைத்துவிடாமல் அல்லது [illegible] ஒருமிக்க, மேடையில் தோன்றி, காணவந்த மக்களுக்கு, நன்றி தெரிவிக்க வேண்டுமென்றும், சொந்தப்பெயர்களுடன் நடிகர்களை அறிந்துகொள்ளமக்களுக்கு இயல்பாக எழும் ஆவலை, இதனால் பூர்த்தி செய்யலாமென்றும், பேச்சில் குறிப்பிட்டார்.

தோழர் பகவதி அவர்கள், தக்க முறையில் பதில் அளித்து, வந்திருந்தவர்களுக்கு நடிகர் குழுவின் சார்பில் நன்றி தெரிவித்துக்கொண்டார்.

மின்சாரத்தைப் பெருக்க வழியில்லை

ஆனால் கிராமங்களையெல்லாம் மின்சாரமயமாக்கும் பேச்சிற்குப் பஞ்சமில்லை

சென்னை மாகாணத்தில் 35,000 கிராமங்கள் இருக்கின்றன. இவையன்றிச சிறு பட்டணங்களும பல இருக்கின்றன. இவற்றுள் நகரங்கள் தவிர, சுமார் 1149 கிராமங்களும், பட்டணங்களும தான் மின்சாரமயமாக்கப்பட்டிருக்கின்றன என்று அரசாங்க அறிக்கையிலிருந்து தெரிகிறது.

அரசாங்க மந்திரிகள் போகுமிடங்களில் பேசும்போது, கிராமங்களுக்கு எல்லாம் மின்சார வசதி ஏற்படுத்திக் கொடுத்து, ரோடுகள் அமைத்து அபிவிருத்தி செய்வதாக மணிக் கணக்கில் பேசத்தவறுவதில்லை. இப்போதுள்ள நிலையில் கிராமங்களை மின்சார மயமாக்கும் வேலையை அரசாங்கம் மேற்கொண்டிருக்கும் வேகத்தைக் கணக்கிட்டால் நம் நாட்டுக் கிராமப் புறங்கள் மின்சாரமயமாக இன்னும் 150-ஆண்டுகளுக்கு மேலாகும என்பதில் சந்தேகமில்லை.

இதற்குக் காரணம், இப்போது இம்மாகணத்தில் உற்பத்தி செய்யப்படும் மின்சார சக்தி 57,61,30,000 யூனிட்டுகளேயாகும். இது போல இன்னும் ஒரு மடங்குமின்சாரசக்தி உற்பத்தி செய்யப்பட்டால் கூட இந் நாட்டின் தேவைக்கு அது போதியதாக இருக்க முடியாது.

எனவே, மின்சாரச் சக்தியைப் பெருவாரியாகப் பெருக்குவதற்கேற்ற முயற்சிகளை அரசாங்கம் காலந்தாழ்த்தாது விரைந்து செய்ய முன்வராமல் வீண் பேச்சுப் பேசுவதில் பயன் விளையுமா?

கிழக்காப்பிரிக்காவில் கிருஷ்ணபரமாத்மாக்கள்

கிழக்காப்பிரிக்காவிலே உள்ள மக்களுட்சிலர் 60-க்கு மேற்பட்ட மனைவி[illegible]டன் வாழ்க்கை நடத்து[illegible]றனராம். இவர்களுட் சிலருக்கு [illegible]00 குழந்தைகளுமிருக்கின்றனவாம். இந்தியப் புராணக் கடவுள்கள்-மகரிஷிகளின் காற்று கிழக்காப்பிரிக்காவிலும அடித்து விட்டதுபோலும்!

இந்த 60 மனைவி, 300 குழந்தைகள் கதையை ஆப்பிரிக்கக்கல்வி நிபுணர் மிஸ்டர் பீட்டர் கொய்னங்கே சென்னையில் ஒரு கூட்டத்தில் கூறினார். இதைக்கேட்டு இங்குள்ள மக்கள் பெரு வியப்படைவார்கள் என்று அவர் கருதினார் போலும்!

நம் நாட்டிலே, 10,000-க்கு மேற்பட்ட மனைவிகளை ஸ்ரீகிருஷ்ணபரமாத்மாவும் 60,000 மனைவிகளை இராம பிரானின் தந்தையான 'தசரத சக்ரவர்த்தியரும்' மணந்து கொண்டார்கள் என்னும் இதிகாச சாஸ்திரங்களைக் கேட்டுக்கேட்டும், நம்நாட்டு மன்னர்கள் பலர் புராணக் கடவுள்களைப்பின்பற்றி பல பெண்களை மணந்து வாழ்ந்ததைப் பார்த்தும் படித்தும் உள்ள மக்கள் நிறைய இருக்கின்றனர். கிழக்காப்ரிக்கா மக்கள் போக்கு, நம் நாட்டுக் கடவுள்களின் நிலைமையுடன் ஒப்பிட்டுப்பார்க்கையில் இக்கடவுள்களின் கால்தூசுக்கும் பெருமோ! எனவே, மிஸ்டர் பீட்டர் கொய்னங்கே கூறிய விஷயம் கேட்டு நம் நாட்டில் வியப்படையோர் விந்தை என எண்ணுவோர் எவருமில்லை. இத்தகைய நடவடிக்கை ஒழுக்கத்திற்கும் மனித இன மேம்பாட்டிற்கும் நன்னெறிக்கும் விரோதமானது என எண்ணுபவரும் பலராக இருக்கமுடியாது. ஆனல் அறிவுலகம் என்றும் கிழக்காப்பிரிக்கத்தையும், கிருஷ்ணபரமத்மாலீலையையும் ஏற்றுக்கொள்ள முடியாமல் மனம் வருந்தும். நத்தான் செய்யும்

உத்தம :: :: ஊழியர்கள்?

பீகார் மாகாணத்தில் உள்ள நாம்கும், ராஞ்சிநகரங்களில உள்ள சர்க்கார் வாக்சைன உற்பத்திச் சாலையின் சில ஊழியர்கள, கடந்த இரண்டு ஆண்டுகளாகக் கள்ளக் கையெழுத்துப் போட்டு பில்களை மாற்றுவதின் மூலம, 14 லட்ச ரூபாய்களுககு, சர்க்காரை மோசம் செய்திருக்கிறார்கள். இந்த மோசடிககு உதவியாக, சர்க்காரின சகல இலாக்காக்களிலும சதிகாரர்கள் இருக்கக் கூடும் என்று, போலீஸ் முக்கியஸ்தர்கள் சந்தேகிக்கிறார்களாம். சம்பந்தப்பட்ட தொழிற்சாலையில் வேலை பார்க்கும் ஒரு ஊழியர்செப்டெம்பர்முதல்தேதியிலிருந்துகாணப்படவில்லையாம். சர்க்காரின் வேறு இலாக்காவில் வேலைபார்க்கும் ஒருவர் இதுவரை கைது செய்யப் பட்டிருக்கிறாராம்,

* * *

கிழக்குப் பஞ்சாப் சர்க்காரின் உணவு இலாக்காவில, 1948 ஜுலை மாதம் முதல், இதுவரையில், லஞ்ச ஊழலுக்காக, இருபத்தைந்து ஊழியர்கள, வேலையிலிருந்து விலக்கப்பட்டிருக்கிறார்கள். முப்பத்து ஆறு ஊழியர்கள் திறமையின்மையின் காரணமாக, வேலையிலிருந்து நீக்கப் பட்டு இருக்கிறார்கள்.

செங்கற்பட்டு மாவட்ட ஆட்சிமன்றத்தில் புதியகட்சி

சென்னை, செப், 10.

செங்கற்பட்டு, மாவட்ட ஆட்சி மன்றத்துக்காகச சமீபத்தில் நடைபெற்ற தேர்தலில், வெற்றிபெற்ற சுயேச்சை உறுப்பினர்கள், மாவட்ட நலன்கருதி, ஒரு வேலைத்திட்டம் வகுத்துக்கொண்டு பணியாற்றுவதற்காக, திருவொற்றியூர் தோழர் T சண்முகம் அவர்கள இல்லத்தில், 9—9—49 காலை கூடினர்.

அப்போது, செங்கற்பட்டு மாவட்ட ஆட்சிமன்ற முன்னேற்றக்கட்சி, என்ற தனி அமைப்பு துவக்கப்பட்டது.

இவ்வித அமைப்பின் அவசியத்தைப்பற்றி, பல உறுப்பினர்கள், விளக்கிப்பேசினர்.

மேற்படி கட்சிக்கு, மாவட்ட ஆட்சிமன்ற உறுப்பினர், தோழர் T. சண்முகம் தலைவராகவும், ஆட்சி மன்ற உறுப்பினர் தோழர் ராகவ ரெட்டியார் செயலாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

விதிமுறை அமைப்புபற்றி ஆலோசிக்க, மேற்படி கட்சியின் அடுத்தகூட்டம், சென்னை பவழக்காரத் தெரு, 7-ம் நம்பர் கட்டடத்தில் 16-9-49-ல் நடைபெறும்.

நாட்டுமக்கள் நாடாள்வதா?

பணக்காரக் கூட்டமிருக்கையில் பாமர மக்களுக்கென்ன வேலை?

அ.ஸ். மன்றத்தில் திரு பி. தேஷ்முக் பேசுகையில், "இந்திய அரசியல் நகல் திட்ட விதிகளின்வாசகம் மிகக்குழப்பமாயிருக்கிற தென்றும், "ஆனாலும் அப்படி யிருப்பினும் எனும் வார்த்தைகள் நிறைய இருக்கின்றனவென்றும், பாமர மக்களும புரிந்து கொள்ளும் வகையில்தெளிவான நடையில் அமைந்திருப்பதே ஒழுங்கானதாகும் என்றும்" குறிப்பிட்டார்.

உண்மையில் நாட்டு மக்கள் நாடாள வேண்டும் என்னும் கருத்துடன் அரசியல் நகல்திட்டம தாயாரிக்கப் படுவதாயிருந்தால், நாட்டிலுள்ள எல்லாக் கட்சியின் பிரதிநிதிகளும், எல்லாத்துறை அறிஞர்களும் அனுபவசாலிகளும் அல்லவா அ. ஸி. மன்றத்தில் அங்கம் வகித்திருக்க வேண்டும்? அரசியல் நிர்ணயம என்பதறகே அர்த்தம் புரியாத ஆட்கள் எத்தனை பேர் இன்று காங்கிரஸ் கட்சியின் பெயரால் அசசபையில் இருக்கின்றனர்! காங்கிரஸ் கட்சியைத் தவிர வேறெந்தக் கட்சிக்கு அதில் இடமிருக்கிறது.

எனவே, இப்போது உருவாகும் அரசியல் நகல திட்ட விதிகள் என்பவை, ஒரே கட்சியைச சேர்ந்த விஷயம் தெரிந்த ஒரு சிலரால், கைதூக்கிகளின் பேராதரவின் மீது நிறை வேற்றப் படுபவையேயாகும. காங்கிரஸ் கட்சி, முதலாளிகளும, அவர்களை எந்நிமிடத்திலும ஆதரித்து நிற்கக் காத்திருக்கும் கைகட்டி வணங்கிகளும் குழுமிய கட்சியாக இருப்பதால், நடாளும் வேலையைத்தங்களுக்குச சாதகமான முறையில் அமைத்துக் கொள்ள விருமபுவதைவிட்டு, முதலாளிவர்க்கம் மேலும கொழுகக இடமளிப்பதை விட்டு, நாட்டுமக்களும் அரசியல் நகல் விதிகளைப்புரிந்து கொண்டு நாடாள முன் வந்துவிடும நிலைமையா உண்டாக்கப்படும? இந்த நிலை அறியாமல் திரு. தேஷ்முக் பேசியிருப்பது உண்மையிலே விந்தையினும் விந்தையாகத்தான் இருககிறது.

அறிவு வளர்ச்சிக் கழகம் கமுதி

கமுதி, செப். 7.—

கமுதிஅறிவு வளர்சசிக் கழகத்தின் சாரபாக, "விடுதலை" இதழைத் தருவிக்க, கழக அபிமானிகளிடம ரூ 34-8-0 வசூலிக்கப் பட்டது. "விடுதலை" அது சமயம் தன்னிலை கெட்டு விட்டதால், அந்த இதழுக்குக்கட்டாமல் நிறுத்தி விட்டோம். இப்பொழுது அந்தப் பணத்தைக் கழக வளர்சசியில் நாட்டங்கொண்டுள்ள பத்திரிகைகளுக்கு அனுப்புவதென்று முடிவு செய்யப்பட்டு, அதன்படி அனுப்பத் தீர்மானம் செய்யப்பட்டுள்ளது. பத்திரிகைகளின் விவரம்.

ஒரு ஆண்டு சந்தா

"மாலைமணி"க்கு	ரூ. 15-0-0
"திராவிடநாடு"க்கு	ரூ. 7-0 0
"போர்வாளு"க்கு	ரூ. 5-0-0
"தனி அரசு"க்கு	ரூ. 3-0-0
M-o கமிஷன்	ரூ. 0-10-0
தபால் செலவு	ரூ. 0-12-9
	ரூ. 31-6-9

ரூ 34-8-0ல் ரூ 31-6-9 போக பாககி ரூ 3-1-3 மீதமாக இருப்பதாகத் தோழர் A. பசுபதி அறிவிக்கிறார்.

தேவை

பின் கண்ட ஊர்களுக்கு முன் பணம கட்டக் கூடிய ஏஜன்டுகள் தேவை,

நன்னிலம், தேனி, சாத்தூர், பெரிய அக்கிரகாரம் (ஈரோடு) காரைக்குடி.

"செல்வ மாளிகை" ஆண்டு விழா

மதுரை, செப். 7.—

இந்நகர் "செல்வமாளிகையின்" 5 வது ஆண்டு விழா செப்டெம்பர் 7ந் தேதி காலையில், புதுக்கணக்கு எழுதிமிகச்சிறப்பாகநடந்தது. விழாவிற்கு உள்ளூர் வியாபாரிகளும் நண்பர்களும் திரளாக வந்திருந்தனர் வெளியூர்களிலிருந்துவியாபாரிகளும, அன்பர்களும ஆசிச்செய்திகள அனுப்பியிருந்தனா. வந்திருந்தோர் அனைவரையும் திரு. எஸ். எஸ். பாலகிருஷ்ணன் இனிது வரவேற்றுபசரித்தார். விழாவையொட்டி ஆயிரவைசிய மஞ்சப்புத்தூர் மகாஜனசபைக்கு ரூ 61ம்; வைசிய வாலிபர் சஙகத்திற்கு ரூ. 51ம்; உடற்பயிற்சி சாலைக்கு ரூ. 5ம் நன்கொடையாக அளிக்கப் பட்டன.

எம். எஸ். எம். ரயில்வே ஊழியர் மாநாடு

சென்னை, செப். 8.

எம். எஸ். எம். ரயில்வே ஊழியர்களின் 6-வது 7-வது மாநாடுகள் முறையே 6—9—49 செவ்வாய், 7—9—49 புதன் ஆகிய இருநாட்களிலும் சிறப்புற நடந்தேறின.

முதல் நாள் மாநாடு சஙகப் பொதுக் காரியதரிசியான தோழர் டி. வி. ஆனந்தன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. வரவேற்புக் கழகத் தலைவர் ஆண்டு அறிக்கை படித்தார். மந்திரி சீத்தாராம ரெட்டி மாநாட்டைத் திறந்து வைத்தார். பின்பு தலைவர் முன்னுரைச சொற்பொழிவு ஆற்றினர். தோழர் எம். எஸ். பாசில் தொழிலாளர் நிலைமை குறித்துப் பேசினர். பின் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு, தலைவர் [illegible]னுரையுடன் மாநாடு கலைந்தது.

இரண்டாவது நாள் மாநாடு மாலை 5-30-மணிக்கு ஆரம்பமாயிற்று தோழர் எம். சந்திர சேகரன் தலைமை வகித்தார். தலைவர் முன்னுரைக்குப்பின் தோழர்கள் வி. சே. ஜான், எம். எல். ஸி, ஜி. ராஜமன்னார் எம். எல். ஏ., ஸி. என். அண்ணாத்துரை எம். ஏ., டி. செஙகல்வராயன் பி. ஏ., பி. எல்., ஆகியோர் பேசினார்கள். தோழர் டி. செஙகல்வராயன் பேசும்போது, கூடியிருந்தோர்க்கு வெறுப்புணர்ச்சியைத் தரும்படியான அளவில் பேசியதால், இடையிடையே கூசசல் போட்டுத்தோழர் செஙகல்வராயன் விரைவில் முடித்துக்கொண்டு உட்காரும்படியாகச் செய்துவிட்டனர்.

நன்றிகூற மாநாடு இரவு 8-மணிக்கு இனிது முடிவுற்றது. (ந—நி)

கலப்புத் திருமணம்

ஈரோடு, செப், 9 —

தோழர்கள் அ. வே. காசிலிங்கம்-வி. ச. இலக்குமி கலப்புததிருமணம் 4—9—49 ஞாயிறு காலை 9-30 மணிக்கு சோமனூரில் மிகச் சிறப்புடன் நடைபெறறது. மணமகன் ஈரோடு செங்குந்தர் உயர்நிலைப் பள்ளி ஆசிரியராவார். மணமகள் கோவை நகராட்சி ஆண்கள் உயர்நிலைப்பள்ளி ஆசிரியை ஆவார்கள். ஆசிரியரும்-ஆசிரியையும். கல்வியொப்ப-வயது ஒப்ப-மனம் ஒப்ப மணம் செய்து கொண்டனர். திருமணத்திற்குத் தமிழ்ப்புலவர் நா. சுந்தரராசனுர் தலைமை வகித்தார். தோழர்கள் புலவர் நாராயணசாமி, புலவர் சிவசங்கரன் ஆகியோர் சொற்பொழி வாற்றினார்கள். வாழ்த்துமடல்களும், பரிசுகளும் மணமக்களுக்கு வழஙகப்பட்டன.

---

100 ரூ. நோட்டு வைத்திருந்தால்!

செப்டம்பர் 12-ந் தேதி முதல், காரச்சி, லாகூர் என்னும் பெயர்கள் அச்சிட்ட இந்திய அரசாங்கத்தின் ரூ. 100 கான்சி நோட்டுகள் செல்ல மாட்டா. ரிசர்வ் பாங்க் வெளியீட்டிலாக்கா அரசாங்க கஜானக்கள், ரிசர்வ் பாங் வெளியீட்டிலாகாவின் கான்சி பெட்டிகள் வைத்துள்ள இம்பீரியல் பாங்க் கிளைகள் ஆகியவற்றில மட்டும்தான் செல்லும்.

உலக சுகாதார டைரெக்டர்

கிருமிகள் அழிவுக் கருவி கண்டுபிடித்தார்

உலக சுகாதார ஸ்தாபன டைரெக்டர் டாக்டர் பிரோக் சிஸ்ஹாம் என்பார் அணுக் குண்டைவிடக் கொன்று அழிக்கும சக்தியுடைய விஷக் கிருமிகளைக் கண்டு பிடித்தார். இதில் 7 அவுன்ஸ் போதும் உலக மானிட சமுதாயத்தை ஒழிக்க.

உலக மக்களின் சுகாதாரம் சீரழியாமல் இருக்க, மனிதருக்குப் பிணி வந்த பின் தீர்க்க முயலவதைவிடப் பிணியே ஏறபடாதபடி தடை செய்யும வழிகளைக் கண்டு பிடிக்க உள்ள இந்த விஞ்ஞானி மிகுந்த ஆராய்சசியின் மீது கண்டுபிடித்திருக்கும் பொருளை மனித சமூக அழிவுக் கருவியாகப்படுத்துகின்றனர் சிலர்.

திருமணம்

மதுரை, செப். 9 —

இந்நகர் தி சௌத் இண்டியன் மான்யுபாக்சரிங் கம்பெனி ("சைபால்")யின் பங்குதாரர் தோழர் எம். இராமலிஙகம அவர்களின் சகோதரி தோழியர் சாரதாம்பாளுக்கும், கூட்டுறவு சங்கங்களின் இன்ஸ்[illegible]க்டர் தோழா யு. சுப்பையாவுக்கும், இன்று திருப்பரஙகுன்றம் ஆயிரவைசிய மஞ்சப்புத்தூரார் மண்டபத்தில், மிகச் சிறப்பாகத் திருமணம நடந்தேறியது. உள்ளூர் வெளியூர்களிலிருந்து டாக்டர்கள், வியாபாரிகள், பததிரிகையாளர்கள், அன்பாகள் திரளாக வந்திருந்தனர். வெளியூர்களிலிருந்து மணமக்களை வாழ்த்தி, வாழ்த்துச செய்திகளும். திருமணப் பரிசுகளும் வந்தன. வந்திருந்தோரனைவரையும் தோழர் எம். இராமலிஙகம். தோழர் எஸ். சுப்பிரமணியம ஆகிய இருவரும் வரவேற்றனர்.

தோழர் V.P. வடிவேல் வெற்றி

விருதுநகர் முனிசிபல் தேர்தலின் முடிவு

விருதுநகர், முனிசிபல் கவுன்சிலுக்கு நடைபெற்ற இடைக்காலத் தேர்தலில், போட்டியிட்ட தோழர் வெள்ளைசாமி (செட்டியார்) வாபஸ் வாஙகிக் கொண்டதால், திராவிடர் கழகத்தைச் சேர்ந்த தோழர் வி. பி. வடிவேல் (நாடார்) தேர்ந்தெடுக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டார். சமீபகாலத்தில் நடைபெற்ற இடைக்காலத் தேர்தல்களில் தோல்வியடைந்ததின் காரணமாக, இத்தேர்தலில் காஙகிரஸ் போட்டியிடத் துணிவு கொள்ளவில்லை,

---

ஏஜண்டு

S. M. பாட்சா

முதலியார் தெரு, மாயவரம்.

இன்று முதல் மாயவரத்திற்கு 'மாலை மணி' ஏஜண்டாக நியமிக்கப்பட்டு இருக்கிறார்.

ஷண்முக[illegible] நடிகர் சங்கம்

புதுக்கோட்டை, செப். 7—

6-9 49ல் காலை 10-மணிக்கு சங்கத் தலைவர் தோழர் K. K. நாகமுத்து அவர்கள தலைமையில், கமிட்டி உறுப்பினர் கூட்டம் நடைபெற்றது.

இந்திய சேனாதிபதி தோழர் கரியப்பா அவர்கள, "ஹார்மோனியஙகள்" எல்லாம் ஒன்று சேர்த்து தீக்கிரையாக்க வேண்டுமென்று புது டில்லியில் சமீபத்தில் நடந்த விருந்து உபசாரத்தில் பேசியிருப்பதற்கு வருந்தியும், "ஹார்மோனியம்" என்ற வாத்தியம், சஙகீதம் என்ற மன்றத்திற்கே அடிப்பீடம் போன்றதென்றும், அக்கருவி இல்லாமல் நாத பிரமத்தை அனுபவிக்க வேறெதுவும் இல்லையென்றும்; தந்திவாத்தியங்களைப்போல் சமயத்தில் சுருதி பேதம்காட்டும் தன்மை அதற்கு இல்லையென்றும்; தோழர் கல்லல் கலைஅழகன் ராமனாதன் செவ்வையாய்ப்பேசினார்கள்.

அத்துடன் சமீபத்தில் நடைபெறவிருக்கும் "சஙக முதலாவது ஆண்டு நிறைவு விழாவை" தோழர் பி. யு. சின்னப்பா அவர்கள் தலைமையில் நடத்துவதெனவும், தோழர் கல்லல் கலைஅழகன் ராமனாதன் தோழர் பி. எஸ். பாலசுப்பிரமணிய தொண்டமான் ஆகியவர்களை விழாவின் வரவேற்பு கமிட்டித் தலைவர்களாகவும்,

தோழர் வி. குருராஜப்பா - ஸி. என். ராஜப்பா இருவர்களையும் இசைமன்ற அமைப்பாளர்களாகவும், தோழர் இளம்பருதி எம். எம். மாரியப்பா - விகடகவி வி. மாரியப்பா இருவர்களும் பொதுக் காரியதரிசிகளாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். செயலாளர்நன்றி கூறக் கூட்டம் இனிது முடிந்தது எனச்செயலாளர் எழுதுகிறார்.

வாழ்க்கை ஒப்பந்த அறிவிப்பு

சுயமரியாதை இயக்கச் செம்மலாகிய பட்டிவீரன பட்டித் தோழா W. P. A. சௌந்தரபாண்டியன் அவர்கள இளையமகன தோழர் கிருட்டினமூர்த்திக்கும், விருதுநகா தோழா எஸ். எஸ். நடராசன் மகள் தோழியர் லலிதாவிற்கும், வாழக்கை ஒபபந்த விழா 14-9-49ம் நாள் காலை 9-30 மணிக்கு விருதுநகரில் நடைபெறும.

புதிய நூல்கள்

இராதாமணாளன் தீட்டிய அரிய சிந்தனைச சித்திரம்

துளிதேன்

0—8—0

காதல்பித்தன் எழுதிய அரிய ஆராய்சசி நூல்

காதல் புரிவது எப்படி?

0—6—0

அண்ணா பேச்சு - - வெற்றி ரகசியம்

0—3—0

நேத்தாஜி உயிரோடு இருக்கிறார்?

0—3—0

வியாபாரிகட்கு 25% கழிவு உண்டு செலவு இனாம.

தனிப்பிரதி வேண்டுவோர் பத்தக விலைக்குத் தபால் தலை அனுப்புக.

அறிவுப்பண்ணை
6, மங்கம்மாள தெரு,
எழுகிணறு, சென்னை 1.

...லது பணக்கார பக்கம் படை வரிசை அமைக்கவோ, எதற்குப் பேசினரோ தெரியவில்லை!

ஆனால் ஒன்று, நீங்கள் ஏழை பங்காளராக, தொழிலாளிகளின் துயர் துடைப்போராக, அவர் கட்டுப்பக்கபலமாகவே என்றும் இருக்கவேண்டும், அதற்கான மனப்பண்பைப் பயிற்சியைப் பெறுங்கள் என்று கூறுகிறேன்.

தொழிலாளர் நலனே நாட்டின் குறிக்கோள், அதுதான் தேசியம.

தேசியம்-தேச மக்கள் நலனில் தான் இருக்கிறது.

ஓவியர் தீட்டுகிறார், அழகான மரத்தையும், அதிலே நல்ல பழங்களையும் அவை பார்க்கப் பரவசமாகத்தான் இருக்கின்றன. ஆனால் அதைப் பசியோடிருக்கும் பறவைக்கு உணவாக்க முடியுமா? நாடகத்தில் நல்ல காட்சியாகவேண்டுமானால்விளங்கலாம். ஆனால் பறவைக்குப் புசி என்று அதைக் காட்ட முடியுமா? முடியாதே! அது போல், தேசியம் என்றவார்த்தை மட்டும் போதாது. தேச நலம்-தேசமக்கள் நலன்-தேசத்திலுள்ள ஏழைத் தொழிலாளர்கள் நலனை முக்கியமாகக் கருதி அதுவே தேசியம் என்ற மனப்பண்பு பெற்று, உங்கள் ... ஆதரவையும் அவர்கள் பக்கம் திருப்புங்கள் திருப்பப் பயிற்சி பெறுங்கள்.

தொழிலாளரை மாக்களாக போக வேண்டாம் என்று, ஏமாளிகள் வலையில் சிக்கிவிடாதீர்கள். சூழ்ச்சியிடம் கொண்டு போய் விடாதீர்கள். நல்ல பாதையில்-நன்மை தரும் எதுவாயினும் அதிலே செலுத்துங்கள்!

பிறர் செய்வது குற்றம்: தான் செய்வது?

அதோ உங்கள் மாநாட்டில்,

...கைய உரிமை, திறமை, தைரியம், வசதி, வாய்ப்பு இருக்கின்றன என்றால், மற்றக் கட்சிக்காரர்களுக்கு எப்படி இல்லாமற் போய் விடும்?

"வருகிறான், வருகிறான், அரசியல 'சூதாடி' என்று அபாய அறிவிப்பு செய்துகொண்டே, தாங்கள் அதே வேலையைச் செய்வது தகுமா? பொருந்துமா? எப்படி நியாயமாகும்?

இந்த நிலை போக, தீர, வழி வகை இல்லையா? இருக்கிறது!

தொழிலாளர்களே தலைவராக வரவேண்டும்

படித்தஉங்களிலிருந்துபண்பும் பயிற்சியும் பெற்றவர்கள் பலர், தொழிலாளர் தலைவர்களாக வரவேண்டும். தொழிலாளர்களிலும் திறமையுள்ளோர், தலைவர்களாக வரவேண்டும். உங்களைப்போன்ற நடுத்தர வகுப்பினர் உள்ளன்பு வைத்து, உங்களிலேயே தக்கவரைத் தலைவராக்கவேண்டும். தலைவர்களை உங்களிலேயே உற்பத்தி செய்யுங்கள். அது மிகவும் நல்லது!

ஆலைத் தொழிலாளிகளையும், வயலிலே பாடுபடும் விவசாயிகளையும், வண்டியோட்டுவோரையும், வீதிகூட்டுவோரையும், சிறுகடைத் தொழிலாளரையும், கட்டை வெட்டுவோர் போன்ற எல்லா வகைத் தொழிலாளர்களையும் பற்றிக் கவலை கொண்டு, ஒன்றுதிரட்டி, நீங்களே நடத்தலாம். விஷய விளக்கமும் தரலாம். அறிந்திருப்போர் அறியாதாருக்கு அறிவித்தல் கல்லது, தெரிந்திருப்போர், தெளிவில்லாருக்குத் தெளிவு படுத்தலாம், பற்பல பிரச்சினைகளைப் பற்றியும். உங்களை நீங்களே காத்துக்கொள்ளும் நிலை பெற்றால், பிற அரசியல சூதாட்...

டக்காரர்களுக்கு வேலை யேது, உங்களிடம்? எனவே உங்களிலேயே உண்மைத் தலைவர்களை உண்டாக்குங்கள்.

அறிவுத் துறைப் புரட்சி

கடைசியாக நான் குறிப்பிட விரும்புவது மிக மிக முக்கியமானதாகும். நீங்களும் சரி, தொழிலாளிகளும் சரி, பொருளாதார பேதத்திலிருந்துமட்டும் விடுதலைபெறப் பயிற்சியும் பண்பும் பெற்றால்மட்டும் போதாது. அறிவுத்துறையில் முன்னேற வேண்டும். மார்க்கத்துறையிலே தெளிவு பெறவேண்டும். மூட நம்பிக்கைகளை முறியடிக்கவேண்டும். அதற்கான பண்பு, பக்குவம், பயிற்சி பெறவேண்டியது. மிக, மிக முக்கியம் என்று கருதுகிறேன்.

நீங்கள் ரயில்வே ஊழியர்கள். ரயில்கள்மட்டும் இல்லாதிருந்தால், நாடு நாகரிகமடையாது, என்பது உறுதி. அவை நாட்டின் பல பாகங்களிலிருந்தும், செய்திகளையும், சாமான்களையும், பிரயாணிகளையும், பற்பல பாகங்களுக்குக், கொண்டுசேர்க்கின்றன, வெகு விரைவில், சுலபத்தில்.

நாட்டின் இரும்பு நரம்புகள்

இது நாம், நம காலத்தில் காண்கின்ற காட்சி. ராமன் காலத்திலே இல்லாத காட்சி. பல்லவத்திலே இல்லாத காட்சி வேதங்களிலே இல்லாத ஒன்று. நாட்டின்நாகரிகத்திற்கு எப்படித் தண்டவாளத்தின் மீது ஓடும் ரயிலானது, "நாகரிகத்திற்குத் தூதுவனாக" அமைந்திருக்கிறதோ, அதே ரயிலவே ஊழியர்களான நீங்கள், "பகுத்தறிவுத் தூதுவர்"களாக விளங்க வேண்டும். என்பது என் விருப்பம், வேண்டுகோள். உடலில் நரம்புகள் மிக முக்கியமானபகுதியாகும். அவை தசைகளைச் சேர்த்துப் பிடித்து, உருவத்தைஉண்டாக்குகின்றன. அதுமட்டுமல்ல, ...அவை தான் உடலுக்கு உடலுறுதியைக் கொடுக்கிறது. அதுபோல் நாட்டின் தேவைகள் அனைத்தையும், நாட்டின் நானாவித பாகங்கட்கும் பரவச்செய்பவை ரயில்கள்தான், அவை நாட்டின், இரும்பு நரம்புகள்.

இந்த இரும்பு நரம்புகள் நல்ல வலிவை நாட்டிற்குக் கொடுக்க வேண்டும் என்பதே எனது ஆசை, விருப்பம், பக்தர்களை இராமேஸ்வரம் காசி முதலிய க்ஷேத்திரங்களுக்கு ஏற்றிச் செலல ரயில்கள் பயன்படுதல் நன்று?

தொழிலாளத் தோழர்கள் தங்கள் உழைப்பில், போராட்டத்தில், நம்பிக்கை தைரியம் வைத்து உழைக்கவேண்டும், வாழ வேண்டும். பாவம், புண்ணியம், முன்வினை, தீவினை போன்றவைகளிலே, நம்பிக்கை வைத்துச்சிக்கிச்சீரழியக்கூடாது உங்கள் போராட்டத்தின் வெற்றியேற்படுவது, உங்கள்பலத்தையும், ஒத்துழைப்பையுமே தான் பொறுத்திருக்கிறது. அதற்கு ஆண்டவனைத் துணைக்கிழுக்க வேண்டாம். அந்த மனப்பண்பு போக்கு மாறவேண்டும் சமுதாய சீரழிவு தீரவேண்டும். அடியோடு ஒழிந்து மக்களிடம், தன்னம்பிக்கை, உழைப்பில் உறுதி கொள்ள மனப்பான்மை வளர வேண்டும், வளர்க்கப்படவேண்டும். அதனை நீங்கள் செய்யலாம் செய்யவேண்டும். செய்ய வேண்டியது உங்கள் கடமை மாக்கூட. இதை நீங்கள் செய்வது எனது அரசியல் சூதாட்டக் காய்களாக நீங்கள் மாறுவதாக

ஏன் இந்த ஏமாற்று வித்தை?

தியாகத்தில் இது ஒரு தினுசோ!

ஒருவர்த்தகர் ஒரு கார் ரூ. 3000 வீதம் இரண்டு கார்களை விற்றுவிட்டு, தம் நண்பரிடம் முதல் விற்ற காரில் 25 சதவிகிதம இலாபம் கிடைத்ததாகவும், 2-ஆவது விற்ற காரில் 25சதவிகிதம் நஷ்டம் ஏற்பட்டதாகவும் கூறினர். அவருடைய நண்பன் இலாப நஷ்டம் இரண்டும் சரியாகப்போய் விட்டது என்றான்.

ஆனால் முதல்கார் வாங்கியவிலை ரூ. 2400 ஆக இருந்தால்தானே 25 சதவிகித லாபம் சேர்ந்தால் ரூ. 3000 ஆகும். அதேபோல, 2-ஆவதுகார் ரூ. 4000 ஆக இருந்தால் தானே 25 சதவிகிதம நஷ்டத்திற்கு விற்க, ரூ. 3000 கிடைத்திருக்கும். ஆக அந்தவர்த்தகர் 2 கார்களையும் ரூ. 6400-க்கு வாங்கி ரூ. 6000க்கு விற்றார் என்றால் அவருக்கு நஷ்டம் 400 ரூபாய் ஆகிறதல்லவா? இவ்வண்ணம் கணக்குப் போடாதவர்கள் அவசரத்தில் 25சதவிகித லாபமும் 25 சதவிகித நஷ்டமும வருவதால் லாபமும நஷ்டமும் சரி என்று கணககுக் கூறிவிடுகின்றனர் அல்லவா? இதேபோன்று ஒரு பொய்க் கணக்கைக் கூறி மக்களை ஏமாற்றப் பார்க்கின்றன தேசிய ஏடுகள்.

"பண்டித ஜவஹர்லால்நேரு—இந்தியாவின் முதல் அமைச்சர்—ஓர் ஆண்டுச் சம்பளமாக ரூ. 61,000 பெற்றார். அதே காலத்திற்குரிய வருமானவரியாக ரூ. 60,417 கட்டினர். எனவே, தமது மொத்த சமபளத்தில் மாத மொன்றுக்கு ரூ, 50-க்குக் குறைவாகவே, (ரூ. 48-9-4) பண்டித நேரு சம்பளம பெறுகிறார்" என்று தேசிய ஏடுகள் கூறுகின்றன.

முழுப்பூசினிக்காயை மறைக்கும் இந்தப்பொய்க்கு எங்காவது மாற்றுண்டா?

பண்டித ஜவஹர் ஓராண்டில் ரூ. 60,417 வருமானவரி கட்டக்கூடிய அவ்வளவு பேரளவு வருமானமுடையவர் என்பதை இது மெய்ப்பிக்கவில்லையா? இவ்வளவு பெரிய வருமான முடையவராக, இவ்வளவு வருமான வரிகட்டக் கூடிய சொத்துடையவராக முதல் அமைச்சர்விளங்குகிறார் என்பதைக் காட்டுகிறது. வரிசொந்தச்சொத்து வருமானத்திற்கும் சேர்த்துதான்! சம்பளத்தை வரிக்காகக் கொடுத்து விடுகிறாராம்! எவ்வளவு பெரிய தியாகம்! சம்பளம் மாதம் ரூ. 50 தானும்! வரியைச்சொந்த சொத்து வருமானத்திலிருந்தே கொடுத்தால் அரசாங்க சம்பளத்தில் இவ்வளவு குறையாதே! ஏன் அவ்வாறு செய்யவில்லை? நேருவின் தியாகத்திற்கு இம்மாதிரி அறப விஷயங்கள் —அதுவும் அர்த்தமற்ற விஷயங்கள்-அதுவும் திரித்துக் கூறும் விஷயங்கள், இவைகள் தானா தேவைப்படவேண்டும்! இவருடைய காரியதரிசியே ஒருமுறை சம்பளம் வாங்கிக்கொண்டு உழைக்க வேண்டாமென்றும் தேசத்துக்காகப் பாடுபட்ட இவ்வளவு பெரிய தலைவர், தேசத்தில் பணநெருக்கடி மிகுந்துள்ள இந்தச் சிக்கலான சமயத்தில் சம்பளம வாங்காமல், அதை அரசாங்கத்துக்கே அளித்துவிடுதல் நலமென்றும் அறிவுறுத்தியும், அதனைப் பண்டிதர் ஏற்க மறுத்து, சம்பளத்தை வாங்கியுள்ளார்.

ஆனல் தேசிய ஏடுகள் இந்த நிலைமையைத்தான், முதலமைச்சர் மாதத்திற்கு ரூ. 50-க்கும் குறைவானசம்பளம் வாங்குவதாகப் பிரமாதப்படுத்திப் பண்டிதரைப் பொருள் ஆசை துறந்த பரமஹம்சர் ஆக்கப்பார்க்கின்றன.

இந்த வகையான தியாகம் செய்யாமல் தியாகிகளானோர் "ஆகஸ்ட் தியாகப்" பட்டியலில் நிறைய இருக்கின்றனர். ஆகஸ்ட் தியாகத்தைப்போற்றும் வீரர்கள் பண்டிதரின் இத்தகைய "தியாகத்தைப்" போறறுவதில் வியப்பென்ன விருக்கிறது! இந்த அற்புதமான தியாகத்தை அறிந்தால், இதைப்போன்ற தியாகிகள் "பணப்பேழை"கள் கூட்டத்திலிருந்து ஆயிரமாயிரமாகக் கிளம்பிவிடுவார்களே!

போர்வாள்

[வாரத்தாள்]

சில தடுக்கமுடியாத காரணங்களால் இந்த வாரம் 10-9-49 'போர்வாள்' வெளிவரவில்லை. அடுதத இதழ் 17-9-49 முதல் வழக்கம்போல் வெளிவரும்.

மானேஜர் : 'போர்வாள்'

'திருக்குறள் தெளிவு'

மக்கள்பேறு-9வது புத்தகம் நயமான ஆராய்ச்சி

விலை ஒரு அணா

12—9—49ல் வருகிறது

கிடைக்குமிடம்:—

போர்வாள் நிலையம்

147. பவழக்காரத் தெரு-சென்னை

வித்வான்:-சுந்தர சண்முகனார்

பைந்தமிழ் பதிப்பகம், புதுசசேரி.

அம்பேத்கார் வாலிபர் சங்கம் திறப்புவிழா

தூத்துக்குடி, செப், 9.

போல்டன் புரத்தில் புதிதாக அமைத்திருக்கும் சங்க நிலயத்தில் டை சங்கத்தின் தொடக்க விழா, 28-8-49ல திராவிடர் கழக முன்னாள் உபதலைவர் திரு, எஸ். எம். செல்லையா அவர்கள் தலைமையின் கீழ் நடைபெற்றது, தோழர் எட்வர்ட் ஜேக்கப் கொடி யேற்றுவித்தார். தோழர் எம். ஆர். ஞான பிரகாசம் அவர்கள் அமபேதகார் படத்தை திறந்து வைத்தார். பல தோழர்கள் சமூக முன்னேற்றம பற்றி சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். பின்னர், இரவு 10 மணிக்கு விழா முடிவுற்றது எனச செயலாளர் எழுதுகிறார்.

பிறப்பு

23—6—48-ல் ஜெயங்கொண்ட சோழபுரத்தில் சீர்திருத்த திருமணம் செய்து கொண்ட [illegible] நாதன் — சரசவதி தம்பதிகளுக்கு 3-9-49ம் நாள் சனிக்கிழமை பகல் ..., ஓர் ஆண் குழந்தை பிறந்திருக்கிறது. தாயும சேயும நலம. [illegible]

Printed & Published by T. M. Parthas... at the Mercantile Press, 2/45. Muthumari Chetty Street, Madras-1.